# Victorian. And proud of it.

# விக்ரோறியன். மற்றும் இதை நினைத்துப் பெருமைகொள்ளுங்கள்.

## எங்களுடைய அணுகுமுறை

**எங்களுடைய சமூகப் பற்றுப் பிரச்சாரம் *“விக்ரோறியன். மற்றும் இதை நினைத்துப் பெருமைகொள்ளுங்கள்.”* ஆனது எங்களுடைய சமூலத்தை ஒன்று சேர்த்து வைத்திருக்கும் பசையை - எங்களுடைய பகிர்ந்த பெறுமதிகள் - மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறது.**

இது, தினந்தோறும் இந்தப் பெறுமதிகளை வாழ்ந்து, அனுபவித்துச் சுவாசிக்கின்ற உண்மையான விக்ரோறியன்களின் கதைகளைக் கூறுகிறது.

இந்தப் பெறுமதிகளைப் பகிராமல் விடும்போது, எங்களுடைய மாநிலத்தின் இணக்கம் தனியாகப் பிரிக்கப்பட்டு வரும் என்று இது காட்டுகிறது. அதோடு, விக்ரோறியா என்பது நாங்கள் வாழ்கின்ற இடம் மட்டுமல்ல.

இது அதற்கும் மேலான ஒன்று என்பதையும் இது நிரூபிக்கிறது - அதாவது இது பங்களித்தல் மற்றும் சொந்தமாக வைத்திருத்தல் மூலம், விஷேசமான ஒன்றில் பகுதியாக நீங்கள் இருக்கின்ற ஒரு இடமாகும்.

## விக்ரோறியன் பெறுமதிகள் அறிக்கை

### விக்ரோறியாவின் பெறுமதிகள்

நாங்கள் எங்களைப் பற்றி எதிர்பார்ப்பவற்றையும், ஒவ்வொரு விக்ரோறியனும் ஒருவர் மற்றவரிடமிருந்து எதிர்பார்க்க வேண்டியவற்றையும் உறுதிப்படுத்துகின்ற பகிர்ந்த பெறுமதிகளின் தொகுப்பான விக்ரோறியன் பெறுமதிகள் அறிக்கை மூலம் விக்ரோறிய அரசாங்கத்தின் பல்கலாச்சாரக் கொள்கை அறிக்கைக்கு ஆதரவளிக்கப்படுகிறது.

இந்தப் பெறுமதிகளைக் கலந்துபேசி மாற்ற முடியாது.

வீட்டில், வேலையில், தன்னார்வத் தொண்டு ஆற்றுகையில் அல்லது சமூகத்தில் என எங்கிருந்தாலும், வாழ்வதற்குச் சிறந்த ஒரு இடமாக - மேலும் நாம் எல்லோரும் நினைத்துப் பெருமையடையக் கூடிய ஒரு இடமாக - விக்ரோறியாவை மாற்றும் மதிப்புகள் இவையே.

*நாங்கள் எங்களைப் பற்றி எதிர்பார்ப்பவற்றையும், ஒவ்வொரு விக்ரோறியனும் ஒருவர் மற்றவரிடமிருந்து எதிர்பார்க்க வேண்டியவற்றையும் உறுதிப்படுத்துகின்ற பகிர்ந்த பெறுமதிகளின் தொகுப்பான விக்ரோறியன் பெறுமதிகள் அறிக்கை மூலம் விக்ரோறிய அரசாங்கத்தின் பல்கலாச்சாரக் கொள்கை அறிக்கைக்கு ஆதரவளிக்கப்படுகிறது.*

VICTORIA

## 1. சகலருக்கும் ஒரே சட்டம்

சகல விக்ரோறியன்களுக்கும் சட்டத்தின் கீழ் சம பொறுப்புகள், உரிமைகள், பாதுகாப்புகள் முதலியவை உள்ளன.

## 2. பாரபட்சம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல

சேர்க்கையையும் பங்குபற்றலையும் முன்னேற்றும் மற்றும் விலக்குதல், இனப் பாகுபாடு மற்றும் எல்லா வடிவங்களையும் சேர்ந்த வன்முறை ஆகியவற்றை மறுக்கும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

## 3. நீங்களாகவே இருப்பதற்கான சுதந்திரம்

ஒவ்வொருவரும் அவரவராக இருப்பதற்கும், தமக்குத் தாமே உண்மையாக இருப்பதில் பாதுகாப்பை உணர்வதற்கும் சுதந்திரம் உள்ளது.

## 4. சகலருக்கும் நியாயம்

ஒவ்வொரு விக்ரோறியனுக்கும் விக்ரோறிய வாழ்க்கை வழிமுறையைச் சந்தோஷமாக அனுபவிக்க அவர்களுக்குத் தேவையான ஆதரவை அளிக்க வேண்டும்.

## 5. நாங்கள் நினைத்துப் பெருமை கொள்ளத்தக்க ஒரு விக்ரோறியாவுக்குப் பங்களிப்பது எங்கள் அனைவரையும் பொறுத்தது

எங்கள் எல்லோருக்கும் ஒத்த விஷயங்களே தேவை – தழைத்தோங்குவதற்கான வாய்ப்பு, எங்களுடைய வெற்றிகள் அடையாளம் காணப்படுவது, எங்களுடைய குடும்பங்களும் பிரியமானவர்களும் பாதுகாப்பாக, பத்திரமாக, மகிழ்ச்சியாக இருப்பது.

Learn more proud.vic.gov.au
/vicandproudofit

## கொள்கை முதற்படிகள்

நாம் ஒவ்வொருவரும் பகிர்கின்ற உரிமைகளையும் பொறுப்புகளையும் விக்ரோறியன் பெறுமதிகள் அறிக்கையானது தெளிவுபடுத்துவது போலவே, அரசாங்கத்திற்கும் நேர்மையான, சுமுகமான விக்ரோறியாவைக் கட்டமைப்பதில் பங்குள்ளது.

கொள்கையில் சகல விக்ரோறியன்களையும் பங்களிக்கவும், சொந்தமாக்கவும் ஊக்குவிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட முன்முயற்சிகளின் தொகுப்பு அடங்குகிறது.

• புதிதாக வந்தடைபவர்கள் **ஆங்கிலம் கற்கவும் வேலையைத் தேடிக் கண்டுபிடிக்கவும்** உதவுவதற்கு $15 மில்லியன் டொலர்கள்.

• $4 மில்லியன் **பல்கலாச்சார விளையாட்டு நிதி**, இதன் மூலம் ஒவ்வொரு விக்ரோறியனும் எங்களுடைய விளையாட்டு மாநிலத்தின் ஒரு பகுதியாக இருக்கும் வாய்ப்புள்ளது.

• சட்டத்தின் கீழுள்ள அவர்களது **உரிமைகளையும் பொறுப்புகளையும்** சகல விக்ரோறியன்களும் அறிந்திருப்பதை உறுதிசெய்வதற்காக, கல்வித் திட்டம்.

• **டிஜிற்றல் கல்வியறிவு மற்றும் பிரஜாவுரிமை முன்முயற்சிகள்**, இவை, இளைஞர்கள் ஒன்லைனில் சூழ்ச்சித் திறமாகக் கையாளப்படும் போது அல்லது ஒன்லைன் தீவிரவாதத்தை எதிர்கொள்ளும் போது, அதை அவர்கள் உணர்வதில் அவர்களுக்கு உதவுவதற்காகும்.

• பொது விவாதத்தை மேம்படுத்த, **விவாதத்திற்கான உரிமை** முன்முயற்சிகள்.

• பணியாற்றும் இடத்தில் உணர்விழந்த வழுவைக் குறைக்கவும் தடுக்கவும் **கெட்டிக்காரரைப் பணியில் அமர்த்தவும்.**

## பெருமைமிக்க விக்ரோறியன்களைச் சந்தித்து, உங்களுடைய கதையைப் பகிருங்கள்

proud.vic.gov.au என்ற இணையத்தளம் தினமும், பங்களித்தல் மற்றும் சொந்தமாக்குதல் குறித்து தங்களுடைய கதைகளைக் கூறுகின்ற விக்ரோறியன்களை தினவும் வழங்குகிறது.

www.proud.vic.gov.au-இல் மேலும் அறிக

VICTORIA